# ஒடுக்கு



அலறி

வேரல்
புக்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடுக்கு

அலறி

வேரல்
புக்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேரல்
புக்ஸ்

வேரல் புக்ஸ் வெளியீட்டு எண்: 21

பெருக்கு * அலறி© * கவிதைகள் * முதல் பதிப்பு: செப்டம்பர் 2022 * பக்கங்கள்: 56 * வேரல் புக்ஸ் * 6, இரண்டாவது தளம், காவேரி தெரு, சாலிகிராமம், சென்னை – 600093 * மின்னஞ்சல்: veralbooks2021@gmail.com * தொலைப்பேசி: 9578764322 * அட்டைவடிமைப்பு: லார்க் பாஸ்கரன் * லேஅவுட்: சந்தோஷ் கொளஞ்சி

Perukku * Alari © * Poems * First Editon: September 2022* Pages: 56 * Veral Books * No: 6, 2nd Floor, Kaveri Street, Saligramam, Chennai – 600093 * Email ID: veralbooks2021@gmail.com * Phone: 9578764322 * Wrapper Designed by: Lark Bhaskaran * Layout Designed by: Santhosh kolanji

**Rs. 70**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சமர்ப்பணம்

பயங்கரவாத தடைச்சட்டத்தின்கீழ்
தடுத்துவைக்கப்பட்டிருந்த
பாராளுமன்ற உறுப்பினர்

# றிஷாட் பதியூதீன்

சட்டத்தரணி

# ஹிஜாஸ் ஹிஸ்புள்ளா

கவிஞர்

# அஹ்னப் ஜெஸீம்

ஆகியோருக்கும்
இச்சட்டத்திற்கெதிராகப் போராடும்
சகலருக்கும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


1. நீர்த்திரள் // 7
2. அடுக்குமாடி // 8
3. களியேறி // 9
4. தென்கிழக்கு // 10
5. ஹிஜாப் / பேரிகை // 12
6. மீன் குளம் // 14
7. நகரம் / பனிப் பளிங்கு // 15
8. மண்நிறக்கடல் // 17
9. நெருப்பாறு // 18
10. இரண்டாவது பாடல் // 19
11. பருத்திக்காய் // 21
12. கரும்பறவை / உன்கூந்தல் // 23
13. இடைவெட்டில் // 24
14. உன்குரல் // 25
15. மலை / ரயில் / கடல் // 26
16. வல்லபம் // 28
17. குளிர்ப் பறவை // 29
18. பச்சைப்பாசி // 30
19. நெடுநல்வாடை // 31
20. பெருக்கு // 33
21. இருகுருவிகள் // 35
22. மருவும் மருதம் // 37
23. வெள்ளைக்காரி/அன்னியச்செலாவணி // 39



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

24. மலர்ந்துதிர்ந்து // 41

25. ஒரு தோப்புத் தென்னை // 42

26. சீனத்துப்பெண்/வல்லாதிக்கம் // 44

27. அந்தப்புரப் பறவை / நித்தியப்பறவை // 46

28. ஒரு சொறங்கை பேரீச்சம்பழம் // 48

29. துளி அல்லது துகள் // 50

30. காகம் கொத்தி // 51

31. மூங்கில் குருதி // 52

32. கள்ளிச்செடி / வார்த்தைகள் // 53

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீர்த்திரள்

பெருக்கெடுக்கிறேன்
ஆர்ப்பரித்து
கடலின் தீரா நிறமாக
அகலித்து
மலரின் மென் இதழாக

காடுகளில்
கூடுகளில்
சிறகுகளால் நிரம்புகிறேன்
ஆகாயத்திற்கும்
தரைக்கும் இடையில்
வானவில்லாய்த் ததும்புகிறேன்

காலங்களை மிகைத்து
பெருக்கெடுத்து வழியும் நீர்த் திரள்
கால்கள் கத்தி
கூரலகு கல்

ஆனாலும்
பஞ்சவர்ணப் பறவை
நான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அடுக்குமாடி

ஒன்றைப் பனைமரம்போல
சூரியனை முட்டப்போகிறது
நத்தைக்கூட்டின் சுகம்
தூக்கணாங்குருவியின் சுதந்திரம்
கிட்டியதில்லை
வட்டில் அடையும் காகங்களாய்த் தகைகிறோம்

கார்காலம்
கடுங்கோடை
வேனிற் காலங்களை நெரிசலில் கடக்கிறோம்
தீப்பெட்டிக்குள் நிகழ்த்தும் ஜீவிதம்
புகைவண்டியில் தொங்கிய பயணம்
யுகங்களை நொடியில் கடக்கும்
பறப்பு
பரபரப்பு

ஊசி இலைகளைத் தடவி வந்த காற்றில்
வனாந்தரத்தில்
கற்குகைகளில்
வாசல் திறந்து
ஆதிக்குடி அமைத்துக்கொண்ட பெருவாழ்வு
மாடிக்குடியிருப்பில் திணறுகிறது

அடுக்குமாடி
அசுரமாய் வளர்ந்து நிற்கிறது
ஆணிவேரில்லாமல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## களியேறி

மயில் வண்ணத்தில் மலர்ந்திருந்தது கடல்
களியேறி
ஆழ்கடலின் நீலம்வரை
அலையெனப் புரண்டோம்
படகாகி மிதந்தோம்

வெண்சங்கு
மஞ்சள் சிப்பி
தென்னம் பூக்களை முங்கித் தேடினோம்
உப்புநீர்
பருகப் பருகப் விடாய்த்தது
விடாய்க்க விடாய்க்கப் பருகினோம்

நீர்ப்பறவை காத்திருந்து கவ்விய இரை
நழுவியது
பச்சைப்பாசி பாம்பாய்ச் சீற
நெடுநேரம் துடுப்பு வலித்தோம்
தொடுவானம் தொட்டு
துவண்டோம்

சிறு தொட்டிக்குள் நீந்திய மீன் குஞ்சென
போதாமையில்
அயர்ந்தது கடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்கிழக்கு

தென்கிழக்குத் திசையில் விளைந்தன
கழனிகள்
கதிர்கள்
மற்றும் கண்சிமிட்டும் வெள்ளிகள்

பசுக்களைப் போல பல்கிப் பெருகி
பட்டியாய்க் கிடந்தன
பல்லாயிரம் பரப்புக்காணிகள்

வரப்பிருந்தது
வாய்க்கால் கரையிருந்தது
வாசமிருந்தது
குருவிப் பாட்டம் குந்திப் பறந்தது

வெள்ளாமை செழித்தது
அறுவடைக் காலத்தில் ஆனந்தம்
அவணக்கணக்கில் அள்ளிய நெல் மணிகள்
பொலிப்பு

கடலென விசாலித்திருந்த கண்டம்
கைக்குட்டைபோல சுருங்கி
மடிகிறது
போடிமாரின் பெருமை
புராணக் கதைகளாகிறது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கூறுபோட்டு விற்றது
குடியேறியது
கட்டிடங்கள் கட்டியது
பற்றைக் காடாகி பசுமையிழந்தது
தரிசு நிலமாகியது போக
எஞ்சியதில்
விதைப்பில்லை
விளைச்சலில்லை

தென்கிழக்குத் திசையில்
வற்றிப்போகின்றன
வயல் நிலங்கள்
கண்மூடிக் கருகுகின்றன
வெள்ளிகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஹிஜாப் / பேரிகை

நிழல் விரித்த வாகைபோல
குரல் இனித்த பறவைபோல
கல்லூரிக்கு
கடைத்தெருவுக்கு
ஏன்
சட்டமன்றிற்கும்
சண்டைக் களத்திற்கும்
செல்கிறாள்

கலாசாரத்தின் பெறுமானங்களை
கட்டிறுக்கியவளாக
கட்டவிழ்க்காதவளாக
காட்சி தருகிறாள்
அவள்
ஆடை, அணிகலனில்
பெண்மை ததும்புகிறது
பேரிகை பீறிடுகிறது
பண்பாட்டின் சீர்மை தொனிக்கிறது

என்றிருக்க
கண்களுக்கு ஏன் திரையிடுகிறீர்கள்
குறுவாளை ஏன் வீசுகிறீர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விலக்கிவிடுங்கள்
கார்முகிலின் குளிரை
கருவண்டின் ரீங்காரத்தை
அவளில் காண்பீர்கள்

ஹிஜாப்
ஹபாயா
புர்க்கா
அணிவதென்பது
மரபை மதித்தல் மட்டுமல்ல
அழகை மறைத்தலும்
மறைத்தலின் அழகும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மீன் குளம்

ஆத்துவாழைக் கூட்டம்
அலைந்து திரிந்தது முகிலென
செந்தாமரை மூட்டம்
மிதந்து முகிழ்ந்தது பிறையென

நீர் துளிர்த்துக் காய்த்துச் சொரிந்த
நெடுங்குளம்
நிரம்பி வழிந்து தளும்பிய
நிறைகுடம்

தோணிக்காரன்
தூண்டில்காரன்
அத்தாங்கு கொண்டு அள்ளிய நீர்நிலம்

வறண்டு கரும்பாறையாகி
வதங்கிக் கிடக்கும் இக்குளம்
தாழப் பறக்கும் கொக்கின்
கண்களுக்குத் தெரிகிறது
கருவாடாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நகரம் / பனிப்பளிங்கு

வானம்பாடியின் சிறுகழுத்து
நெரிக்கப்பட்டதென
சூரியகாந்தியின் மென்தண்டு
உடைக்கப்பட்டதென
குற்றுயிராய்க் கிடக்கும்
நகரத்திலிருந்து
கரும்புகை எழுந்து படர்கிறது

டாங்கிகள்
விமானங்கள்
படைகள்
போர் முழக்கத்தோடு
உள்நுழைந்த நேரம்
அமைதியிழந்தன ஆலயமணிகள்
காற்றொடுங்கிப் போக
அணைந்து போயின மெழுகுவர்த்திகள்

கோதுமை வயல்களைக் கொறித்துப் பறக்கும்
வெட்டுக்கிளிகள்
எத்திசைகளை இனித்தேடும்
பனிக்கரடியின் பாவனையில் துள்ளும்
பையன்களின் கனவுகள்
எப்பள்ளத்தாக்கில் வீழும்

பேரரசர்கள்
சீமாட்டிகள்
வீற்றிருந்த மாடங்கள்
கட்டிடங்கள்
மனங்கள்
பொடிப் பொடியாய் நொறுங்குகின்றன



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆக்கிரமிப்புக்கான
அதிகாரத்திற்கான
அடக்குமுறைக்கான அக்கப்போர்
சூரியனையும் சுட்டு வீழ்த்த
தொடுக்கப்பட்டிருக்கும் உக்கிரப்போர்
பனி பளுங்கும் பொன்னெழிற் பூமியில்
கட்டப்படும் கல்லறை
அல்லது
அமைக்கப்படும் அணுஉலை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மண்நிறக்கடல்

செட்டையடித்துச் சுழிக்கிறது
மண்நிறத்தில் கலங்குகிறது

மீன்கொத்தியின் கூர்ச்சொண்டு கிழிக்க
நீலம்பாரிக்கிறது
செம்படவன் விரிக்கும் வலைக்குள் நழுவுகிறது

நங்கூரமிடும்
நாவாய்கள் கண்மிரள
பாறை இடுக்கில் பதுங்குகிறது

கருநீலத்தொட்டிக்குள் கட்டுண்ட
சிறுமீன் குஞ்சென
தப்பிக்க
தப்பிக்க
நீந்துகிறது கடல்
நீந்த
நீந்த
தப்பிக்கிறது கடல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெருப்பாறு

நெருப்பாற்றை
நீந்திக் கடந்திருக்கிறான்
நியாயமற்ற கைதின்
நிந்திக்கப்பட்ட நெஞ்சின்
நீலம் பாரித்த தடங்கள் தெரிகின்றன

அறப்போரில் அஞ்சி
சரிந்திடாமல்
திடத்தோடு திணறி
சாய்ந்திடாமல்
துயரக் கிடங்கில் துவண்டெழுந்திருக்கிறான்

பயங்கரவாத ( தடைச் ) சட்டத்தின்
பழுக்கக் காய்ச்சிய
பக்கங்களினால்
புடம்போடப்பட்டிருக்கிறான்
போதி தத்துவத்தின் புனிதம் சிதைத்து
ஆதிசேடனின் அகந்தை கிழித்து
அடியெடுத்து வைத்திருக்கிறான்

எரிதணலிடையிருந்து
எழுந்து வந்திருக்கிறான்
காட்டாறாக
சவால்களை
சந்தித்து வந்திருக்கிறான்
வஞ்சிக்கப்பட்டவனின்
பிரார்த்தனைகள்
வானைப் பிளக்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இரண்டாவது பாடல்

"ஒரு சூரியன் பல தாமரை
உறவாடினால் பாவமா"
பாடல் வரிகளுடன்
இமை திறக்கிறது
இரவுப் பறவை ஸ்மார்ட்போன்

பிரியத்தைப் பிழிந்து ஊற்றத் தொடங்கும்
நேரம் நள்ளிரவு 12.37
வெள்ளியோடையில்
நட்சத்திரமீன்களாகி நீந்துகின்றோம்
அதிமதுரம்
கல்கண்டு
மாதுளம் சாறு வழியும் கிண்ணத்தில்
இரவைப் பருகுகின்றேன்
பேரீச்சம்கனி
ஒட்டகப்பாலில் ஊறிய பாதாம் பருப்பின்
சுவைகலந்து பரவசமூட்டுகிறாய்

மங்கல் விளக்கொளி சுடர
திரைக்குள் மடிகிறது
நமக்கிடையிலான 33KM தூரம்
ஆட்காட்டி விரலுக்குள் சுருள்கிறது
10GB
பேரின்பக் கடலில் அமிழ்கிறோம்
கரைதொட்டோடுகின்றன
ஈரலைகள்
கிளைவிட்டசைகின்றன
ஈரிலைகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிறையென நெற்றிப் புருவங்கள் குவிய
ஹலாலாக
ஆடை அணிவது பற்றியும்
ஆகாரம் புசிப்பது பற்றியும்
அர்த்த ராத்திரியில் வேதம் ஓதுகிறாய்
அவுலியாக்குஞ்சு போல
ஆமோதிக்கிறேன்

பிரியத்தில் உருகி இறுதிச்சொட்டை பருகும்
நேரம் நடுச்சாமம் 03.17
"ஒருவர் மட்டும் குடியிருந்தால் துன்பம்
ஏதுமில்லை
ஒன்றிருக்க ஒன்று வந்தால் என்றும்
அமைதியில்லை"
இரண்டாவது பாடலுடன்
இரவுப் பறவை இமை மூடுகிறது
Good night


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பருத்திக்காய்

அலையென
இலையென
பெருக்கெடுத்து வழிகிறது

கடலில்
உப்பின் கரிப்பில்லை
உவர்ப்பில்லை
வயலில்
பச்சையப் புசிப்பில்லை
வாழ்விற்கு ஏற்றதான
வளங்களில்லை
வனப்பில்லை
தொழிலில்லை
வலிய தோள்களுமின்றில்லை

சனத்தொகைப் பெருக்கத்தில்
சளைப்பில்லாமல்
சடைத்து வீங்குகிறது உலகம்
வெயிலர்களாக
வேங்கைகளாக அலைவுறும் அவலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைகள்
மழைக்காடுகள் மக்கி மடிய

அருவி மருவி மறைந்தொழியும்
மருதம்
மந்த மாருதம்

பருத்திக் காயென
வெடித்துப் பறக்கப் போகிறதோ
பூமி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கரும்பறவை / உன்கூந்தல்

பூரணகும்பம் போலிருக்கும் கொண்டையை
அவிழ்த்துப் போட்டு வாருகிறாய்
அது
பனைமரத்தின் நிழலை ஒத்ததாய்ப் படர்கிறது
உள்ளிருந்து
ஐவ்விதழ்ப் பூக்கள் ஒவ்வொன்றாய் உதிர்கின்றன

பாளைவெடித்து வடியும் பதநீரென
குளித்துக் கரையேறும் பொழுதில்
சொட்டும் நீர்த்துளிகளை
வண்ணத்துப்பூச்சி மோகித்துப் பருகும்

இசைக்கோலம் பெருக்கிடும்
தம்பூரா அல்லது வீணையின் நரம்பு கம்பிகளென
அலைவுறும்
செம்பட்டை பின்னாத முடிகள்
கறிவேப்பிலை
கராம்பூ
நிறத்திலான வாசனையைச் சிந்தும்

கோதிட புற்றில் புகும் பாம்பு
என்கரம்
பட்டென்று பறக்கும் கரும்பறவை
உன்கூந்தல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இடைவெட்டில்

பாறை முழுவதும்
படர்ந்திருக்கிறது பற்றைக்காடு
பசுமையிழந்து

காய்ந்திருக்கும் வேர்களில்,
விழுதுகளில்
தீ பற்றிய பயம்
நீருக்குத் தவிக்கும் இலை நாவுகள்
நீடிக்கும் வறட்சி

பாய்ந்து உயிர்விடத் துடிக்கும்
கருங்கல்லொன்று
உச்சிப்பாறையில்
தற்கொலைக்கான தருணம் பார்த்திருக்கிறது
மிரளும் விழிகளோடு

அனல் தெறிக்கும் கோடையில்
மயானம் போலொரு பொழுது

பாறை அசைகிறது
பாய்கிறது கல்
பறக்கிறது பொறிபற்றிப்
பொசுங்குகிறது பற்றைக்காடு
பெருந்தீ

இப்பிரளய இடைவெட்டில்
இருந்ததோ
காற்று


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உன்குரல்

மண்குடத்தில்
பழுத்த நீரென குளிர்ந்து சொட்டுகிறது
நாதமெனும் பூச்சொரிகிறது

இரவெனும் கறுப்புப்பூவை
வண்ணங்களாக மலர்த்துகிறது

வடதுருவம்
தென்துருவம்
கடக்கும் பறவையின் பஞ்சவர்ணமென
ஜாலம் காட்டுகிறது
ஒளியைக் கூட்டுகிறது

மங்காத இரசம் தடவிய கண்ணாடியில்
விழிகளென விரிகிறது
உன்குரல்

தெவிட்டாத கரும்புச் சாறென வழிகிறது
தீராத் தாகத்துடன் பருகுகிறேன்
பருகிக் கொண்டேயிருப்பேன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலை / ரயில் / கடல்

மலைப்பாதையில்
உல்லாசப் படகென ஊர்கிறது ரயில்
இருக்கை பொன்னூஞ்சல்
இடுப்பளவு நீரில் நனையும் சுகம்

பதுளை
பண்டாரவளை
ஹப்புத்தளை
மலை நகரங்களை ஊடறுக்கும் பயணம்
கரையென நீளும் தூரம்
அலைகளின் பேரிசை பெட்டிகளில்

கடல்காக்கையின் சிறகென மனம்
சாரலில்
சரிவில்
குன்றில் சிறகு விரிக்கிறது

இருமருங்கும் ஓடும் மரங்களில்,
இலைகளில்
சிப்பியின் சுருக்கமும், சங்கின் வாசமும்

மலைப்பயணத்தில்
கடலின் வழித்தடங்களைக் காணும் அபூர்வம்

அந்தமற்ற காற்று
காட்டுமூலிகைச் சாற்றை நுரையென
நாசியில் தெளிக்கிறது
தாவிச் செல்லும் மந்தைகளில் மீன்களின் துள்ளல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பனிப்புகார் மூடும் பூக்களில்
பவளப்பாறையின் மோனம்
தேயிலைச் செடிகளின் அபிநயம்

சாய்வில், வளைவில்
சமாந்தரம் குலையாமல் செல்கிறது ரயில்
மலைகளின் பூர்வ மடிப்பில்
அலையெறிகிறது
கடல்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வல்லபம்

பன்னிரெண்டு குதிரைகளின் முதுகில்
தாவிச்செல்கிறது சூரியன்
கூர்வாளின் மினுக்கம்
போர்க் கவசத்தின் பளபளப்பு

அதிகாலையில்
குழந்தையின் வளையல் ஜொலிப்பு
செம்மீன் பார்வை

கர்வமும், செருக்கும்
வெயிலின் கொதிப்போடு ஊற்றெடுக்கும்

ஆணையிட
ஆயிரம் தாமரைகள் மலரும்
உப்பளங்கள் மடியும்
வாவிகள் தவளைகள் மீதேறி தப்பிச்செல்லும்

நிலத்தின் ஆட்சி
நீரின் சுழற்றி
பெருங்காட்டையே சுருட்டிப் போடும்
வல்லபம்

அக்னி பிரவாகம், வியாபகம்
அத்தனையும்
கருக்கலில்
அரைக்குருட்டோடும், வேக்காட்டோடும்
அடங்கிப் போகும்
பொட்டுப் பூச்சியென


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குளிர்ப்பறவை

பறவையென
ஜன்னல் வழி நுழைகிறது
குளிர்

வெயிலின் ஈரமும்
மழையின் சூடும் மயிர்க் கால்களில்

வௌவாலின் குருடும்
வண்ணத்துப்பூச்சியின் படபடப்பும் பார்வையில்

தீயின் சுவாலை எறிந்தும்
மகரந்த மணிகள் சொரிந்தும்
அகலச் சிறகை விரிக்கிறது
அசைக்கிறது

இறுகப் பின்னிய போர்வைக்குள்
இறகுகள் நீவிப் பறக்கின்றது
தகதகப்பு
தண்ணீரில் ஆடும் தண்டு
அலைகள் அடங்கும் இரவு

குலாவுகை
கும்மிருட்டு
குறுகுறுப்பு
கதவுகள் மெல்ல விரிய
வெட்கம் கூடி வெளியேறி விடுகிறது
உஷ்ணமாக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பச்சைப்பாசி

நெருப்பு
நீலாம்பல்
காற்று
பச்சைப்பாசி
பனித்தூறல்
கலந்த கோர்வை நேசம்
காலக்கடிகாரம்
கண்ணிழந்தவன் கடக்கும் பாலம்
அநாதி அந்தம்
பேதலிப்பு
வாழ்வெனும்
பெரு மைதானம்
பாதம்
நீ
பந்து
நான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நெடுநல்வாடை

தகிக்கும் வாடைபற்றி
யோசித்ததில்லை
அணுக்கமாய்
நெருக்கமாய்
நீ
இருந்தவரை

சூரியன் சிதறிக் கிடக்கும்
இவ்வேளையில்
உலர்வதற்கான
தீயில் நனையும் பொழுதெல்லாம்
உன் தீண்டலின் பிரக்ஞை

விரைந்து
காற்றை நெரிக்கலாம்
கடலைக் குடிக்கலாம்
காலத்தை எப்படி நகர்த்துவது

யன்னலை வருடும்
மாதுளம் பூக்களின் மணமும் நிறமும்
உன்
மணத்தையும் நிறத்தையும்
கிளர்ந்தபடி
விரிகின்றன


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யுகமாய்க் கழியும் பொழுதுகள்
உனக்கு
நீள்துயரம்தான்

நெடுநல்வாடைக்குப் பின்னான
சுகந்தத்தை நினைத்தபடி
நிகழ்வை நகர்த்துவோம்
வா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெருக்கு

மலைகள்
வாசலாய்த் திறந்திருந்தன

சமவெளியின் விரிப்பில்
படுத்தபடி
நட்சத்திரங்களை
எண்ணிக்கொண்டிருந்தாய்

என்னைப் பார்த்ததும்
அடர் இருளில்
கண்கள் ஊர்வதை
கவனிக்கத் தவறவில்லை

உடலில் காமத்தின் முடிச்சுகள்
வெடிக்கத் தொடங்கின

இதழ்கள் இறுக்கத்தில்
ஊறிய நீர்
உனதா
எனதா

ஒருவர் தாகம் ஒருவர் தீர்க்க
ஆடைகள் களைந்து போயின
முற்றும் துறந்து சங்கமித்தோம்
பாம்பின் இணையாய்
புரண்டு புரண்டு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புணர்ந்து புணர்ந்து
உச்சம் கடந்து துவண்டோம்

ஊற்றெடுத்த உவர்நீர்
பெருக்கை
உலரவிடப் பக்கத்தில் புரண்டேன்

மலையடிவாரம்
எப்போதும் பெறாத வர்ணத்தைப் பெற்று
மோனத்தில் ஒளிர்ந்தது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருகுருவிகள்

எப்போதும்
இனிமை சிந்தும் குரலில்
பாடும்
இரு குருவிகளில் ஒன்று
இன்று
பெருங்குரலெடுத்துக் கத்தியது
ஏனென்று தெரியவில்லை
புரியவுமில்லை

மொழிகளற்ற தேசத்தில் பிறந்திருந்தால்
நிறங்களற்ற வானில் பறந்திருந்தால்
எவ்வளவு நன்றாக
இருந்திருக்கும்

பறவைகளின் பரிபாஷைகளை
நன்கு
அறிந்திருக்க முடியும்

ஓட்டு வீடுகளுக்கும்
மாடங்களுக்கும்
முதிர் மரங்களுக்கும் அப்பால்
இந்தக் குருவியின் பெருங்குரலுக்கு
பதிலுரைத்த அந்தக் குருவி
அப்படி என்னதான் சொல்லியிருக்கும்
துயருற்று



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விர்ரென்று இரு குருவிகளும்
பறந்துவிட்டன

குருவிகளின் துயரத்தை
தூக்கியபடி கூடடைகிறேன்
நான்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருவும் மருதம்

பீடிப் புகை மணத்தை
அருந்தியபடி
அசைந்து நகர்கிறது பொணயல்

கேட்டிக் கம்பு இழுவையில்
தோலுரிகின்றன
சாம்பலும், செவலையும்

ஓட்டிச் செல்கிறான் ஒய்யாரமாக
ஏற்றிச் செல்லும்
வைக்கோல் கற்றைகளில் நிரம்பியிருந்தன
வயல்
வயிறு
வாழ்வு

இந்தப் போகம் முடிந்தது
அமோக விளைச்சல் என்றில்லை
பத்து பன்னிரெண்டு அவணம்

கதிர் பறிந்த பருவம் முதல்
ஓட்டு வட்டை விட்டது வரை
சன்னதமாய்ப் பறக்கும்
சட்டித்தலைக் குருவி
கொக்கு
பதர்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வண்டிக் கீழசையும் லாந்தர் ஒளிபோல
பிரகாசமாய்
மங்கலாய்
பொட்டாய்
மருதமும், வசந்தமும் தூர்ந்து போகின்றன

எச்சமும், சொச்சமுமாய்
வண்டில் பாரம் மாட்டைத் தொட
மாட்டையும், வண்டிலையும்
இழுத்துச் செல்கிறது
மணியோசை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வெள்ளைக்காரி/அன்னியச்செலாவணி

மழைக்காலத்திற்குப் பிறகு
சிறகுலர்த்தி தாழ்கின்றன மேகங்கள்
வெண்மணற் பரப்பில்
நடக்கிறான் பணியாளன்
படுக்கிறாள் வெள்ளைக்காரி

செதில் மணக்கும் மேனியில்
கடலை அணிகிறாள்
அவளின் நீலக்கண்களில்
அலைகளின் தெறிப்பு
கையில் ஏந்தியிருக்கும் கண்ணாடிக்கிண்ணத்தில்
படிகிறது பச்சைவெயில்

whatsapp
viber
இணைப்பில் உழலும் அவள் கைத்தொலைபேசியில்
வானம் மார்பெனச் சரிகிறது

நாடும், நானிலமும்
அன்னியச் செலாவணியில் செழிக்கிறது

நெய்தல் நிலப் பயணியவளின்
கரன்சி கரைகிறது
பாசிமணிகளில்,
பாம்பாட்டிகளில்,
இரத்தினக்கற்களின் ஒளியில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உச்சி வெயிலில்
விட்டுவிட்டு அருந்தும்
செவ்விளநீரில்,
எலுமிச்சம் சாற்றில்,
பியர் நுரையில்
திளைக்கிறது பசுந்தோட்டங்கள்

மல்லாந்து படுத்தவள்
குதித்தெழுகிறாள்
குட்டி நாயெனக் கூடவே பணியாளும்
மழைக்காலத்திற்குப் பிறகு


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மலர்ந்துதிர்ந்து

நிலவின் விரல்கள் தீண்ட
அல்லி
ஆம்பல்
முல்லை
மொட்டரும்பி முகிழ்ந்து
பொய்கை நிரம்பிப் பூரிக்கும்
கருணையின் ருசியோடு
வசந்த காலத்தின் இசையைக் கோக்கும்

காற்றின் தோகை வருட
மல்லிகை
செவ்வரளி
தாமரை
மலர்ந்து விரிந்து
தோரணத்தில் தொங்கி அசையும்
மோகத்தின் கண்களோடு
கோடை காலத்தின் ஒளியைச் சிந்தும்

பனியின் சூடு பாவ
அந்தூரியம்
ரோஜா
ஓக்கிட்
பூத்துக்குலுங்கி
பள்ளத்தாக்கில் சரிந்து சொரியும்
கனவின் நிறத்தோடு
இலையுதிர் காலத்தின் குளிரைப் பருகும்

ஒரு நாள்
உடல் நின்று பிரியும் உயிரென
உதிர்ந்தும் போகும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு தோப்புத் தென்னை

பண்ணை நிறைந்த பசுக்களென
ஐநூறு
ஆயிரம்
ஒரு தோப்புத் தென்னை
கன்றின் செழுமையுடன்
பாலின் குளுமையுடன்

அடி பெருத்த கிழட்டு மரங்கள்
வான் கிழித்து நெடுக்கின்றன
அதில் எப்போதும் பேதலித்த முட்டுக்காய்கள்

பாளை வெடித்துப் படரும் தெம்பிலி
அதில் ததும்பி வழியும் தெப்பங்கள்
குரும்பைகள்
உச்சி வெயிலின் நீர்மை
ஒரு முட்டிக் கள்

கோடை வெப்பம் கொதிக்கும் காலம்
வட்டில் பெருகும் காகங்கள்
ஓலை பூக்கும் கிளிகள்

காவோலை விழ குருத்தோலை சிரிக்கும்
குருத்தோலை இலைக்க காவோலை கதறும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாகித்துக் களைத்த நடுமதியம்
தோப்பில் நுழைகிறேன்
உச்சி வகிட்டில் உட்கார்ந்திருக்கிறது சூரியன்
தளம்பித் தொங்குகின்றன பச்சைக் குலைகள்

அள்ளிப் பருகுகின்றேன்
அதிலொன்றை
பருத்த பெண்ணின் முலையென


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சீனத்துப்பெண்/வல்லாதிக்கம்

சிவப்பில் நட்சத்திரங்கள் மின்னும்
பட்டாடை விரித்துப் பாடிக்கொண்டிருக்கிறாள்
சீனத்துப் பெண்
அவள் பாடலில்
தாழம்பூ வாசம்
பாம்பின் படம்

வூஹான் சந்தையில்
முகக்கவசம் அணிந்தபடி
பலர் பாடலை அருந்துகின்றனர்
ஷங்காய் தெருக்களைப் பாடல் நனைக்கிறது
சதுக்கத்தில்
திபெத்தின் பீடபூமிகளில்
மடாலயங்களில் துயரெனப் படிகிறது பாடல்

பொப்
கஸல்
ஹிந்துஸ்தானி
பைலா
ராகங்களை மிகைத்து ஆக்கிரமிக்கிறது அவளிசை
பேரிசை,
மூங்கிற்குழலிசை

கடலோரம்
நட்சத்திர விடுதியில் ஆடிக்கொண்டிருக்கின்றனர்
மலர்கொத்து ஏந்திய ஆடவர் கிறங்கிப்போகின்றனர்
அவளிசையில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீவின்
கரை கடலை நோக்கிப் பாய்கிறது
கடல் கரையை நோக்கி மடிகிறது
துறைமுகத்தில்
நங்கூரமிடுகின்றன போர்க்கப்பல்கள்
அசைகின்றன நாவாய்கள்

நோய் நொதிக்கும் காலமும்
எல்லைச் சுவர்களைத் துளைத்து
பெருக்கெடுக்கும் அவள் பாடலுக்கு
சிவப்பு
மஞ்சள்
வல்லாதிக்கம்
உட்பட ஏழு நிறங்கள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## அந்தப்புரப்பறவை / நித்தியப்பறவை

அரண்மனை கூட்டைக் கிழித்து
பறக்கிறது
அந்தப்புரத்தில் அடைபட்ட பறவை

தொலைதூரம் கடக்க, நீள்துயில் கலைக்க
இரு கால்களை நான்காக நீட்டியது
இரு கண்களில் நிலவினை ஊற்றியது
தப்பித்த பறவை

சாகரப் பாதையில் கானகத்தைத் தேடும்
அதன் கண்களுக்கு
பாலைவெளி
பாழ்நிலம்
பனிப்பாறைகளுமாக மாறி, மாறி தெரிகிறது
பூமியின் வரைபடம்

கால்களில் காற்றை அள்ளிக் கொண்டும்
தலையில் சூரியனைச் சுமந்து கொண்டும்
தாழும் பறவைக்குத்
தட்டுப்படவில்லை ஒற்றை மரமாவது

முடிவற்ற திசையில்
வானைத் தீய்க்கும் எரிமலைக் குழம்பு
தாகம்
கடும் குளிரும் வாட்டுகிறது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஐந்து இரவுகளும், ஆறு பகலுமாக
அலைந்து சோர்கையில்
கூடு திறந்தது போல
தாங்கிக்கொள்கிறதோர் பூர்வமலை
அதில்
அலையெறிந்தாற்போல மரஞ்செடிகொடிகள்
அருவிகள்

மந்திரப்பொழுதில் திளைக்கிறது பறவை
வசீகரம்

மென் இறகின் நிறங்களே
காட்டுப்பூக்களாக
தேன் குரலின் ஒலியே
மலையருவியாக
விரியக்கண்டு
நித்தியத்தில் நிறைகிறது பறவை


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஒரு சொறங்கை பேரீச்சம்பழம்

மங்கலாக மாதப்பிறை
அத்துவான் வெளியில் தெரிகிறது
தலைப்பிறை
இரண்டாம்பிறை
இரண்டில் ஒன்றாக இருக்கலாம்

சொர்க்கத்தின் எழிற் சோலை
நெற்குருவியின் கண்களில் விரிகிறது
நோன்பிருக்கிறாய்,
பசித்திருக்கிறாய்
ஏழுவானம்
முக்கடல்
இருள்குகை
இறைவேதம் அருளிய மாதத்தின்
பிரவாகமாக இருக்கிறாய்

முன்பொரு காலமிருந்தது
பக்கீர் பாவா ரபான் ராகமிருந்தது
ஸலவாத் சப்தத்தின் சாரமிருந்தது
விசாலமிருந்தது
மினாராக்களில் சோடிப் புறாக்களிருந்தது

இன்றும்
ஆனையிருக்கிறது,
அங்குசமில்லாதிருக்கிறது
பக்தியிருக்கிறது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பக்குவமில்லாத பரவசமிருக்கிறது
பெருமையிருக்கிறது
பள்ளிகளில் பனிப்புகார் படர்ந்திருக்கிறது

உன்னிடம் எதுவுமில்லாதிருக்கிறது
ஸஹர்
ஒற்றைப்படை இரவு
இப்தார்
தியாகித்திருக்கும் முப்பது பொழுதுக்குமாக

இப்போது என்னால்
உனக்காக
தரமுடிந்திருப்பது
ஒரு சொறங்கை பேரீச்சம்பழம்
ஒரு கோப்பை கஞ்சி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## துளி அல்லது துகள்

இயந்திரப்படகுகள், நீள்கயிறு
கட்டுமரம்
நூற்றாண்டு காலம் வளைந்தும், இழுத்தும்
வலைக்குள் சிக்காத கடல்

ஒட்டகைகள், நெடுவழிப்போக்கர்
தீக்காற்று,
ஓயாமல் பயணித்தும்
திசையெங்கும் விரியும் பாலை

வெட்டரிவாள், வேட்டை விலங்குகள்
கொடுந்தீ
அரிந்தும், எரிந்தும் சாம்பலாகியும்
விதைக்குள் உயிர்க்கும் காடு

செங்கால் நாரை, ராட்சசக் கழுகு
கரிச்சான் குருவிகள்
ஏகமாய் விரித்துப் பறந்தும்
சிறகுக்குள் சுருங்காத வானம்

மாகடலும், விரிபாலையும்
பெருங்காடும், நெடுவானும்
ஐம்பூதங்களும்
அண்டத்தில் துளி அல்லது துகள்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காகம் கொத்தி

மாங்கனியை கொறித்திட
தாவுகிறது அணில்
மரமெங்கும்

காகம் கொத்தித் தீர்த்த
கோதெனவும்
வெளவால் கடித்துறுஞ்சிய
சாறெனவும்
உச்சிக் கந்தில் தொங்குகிறது பாதி

கிளைகளில்
ஏறியும், இறங்கியும்
ஏமாற்றத்துடன் திகைக்கிறது

எனது சாயலொத்த
அணிலிடம்
எப்படிச் சொல்வேன்

கண்கொத்திப் பாம்பென
காகம் கொத்திப் போன
கனியின் கதையை
மேலும்
உன்னையும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மூங்கில் குருதி

மூங்கில் பூக்கும் இலைகளில்
மயிலிறகின் வருடல்
அலையின் நர்த்தனம்

கலவி உச்சத்தில் புடைக்கும்
கழுத்து நரம்பென
கரும்பச்சைக் கோடுகள்
மஞ்சள் மேனியெங்கும் நீளும் ரம்யம்

நெடுப்பமாய்
நேராய்
வளரும் தண்டுகளில்
தங்க மோதிரமென மினுங்கும்
மொளிகள்

காற்று இறைக்கும் ஓசையில்
புல்லாங்குழ்லாகிறது
அரிவையர் நீராடும் ஆற்றோரம்
பூரித்தாடுகிறது

மழுக்கென மானுடன்
கால்களைத் தறிக்கையில்
மூங்கிலிலிருந்து பெருக்கெடுக்கிறது குருதி
காடெங்கும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கள்ளிச்செடி / வார்த்தைகள்

வானவில்
வந்தமரும் வண்ணத்துப்பூச்சி
வடிவிலான வார்த்தைகள்

கனகாம்பரப்பூவின் நிறத்தில்
பிரிந்த வார்த்தைகள்
கள்ளிச்செடியின் முட்களில்
சிக்கிக்கொள்கின்றன

தடித்ததும், வெடித்ததுமான
கற்பாறை பிளவு
அதற்குள்
கிளையற்றுப்போகும் மரமென
உறவை முறிக்கிறது

மௌனத்திற்கும்
தியானத்திற்கும் இடையில்
சமுத்திரப் பரப்பென மிதந்த வார்த்தைகளில்
கலந்தது
ஒரு துளி விசம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இயற்பெயர் அப்துல் லத்தீப் முஹம்மட் றியாஸ்.

கிழக்கிலங்கையின் மருதமுனையைச் சேர்ந்தவர்.

சட்டத்தில் இளமானி பட்டமும், மனித உரிமைகள், பொதுச் சுகாதாரம், உளவளத்துணை என்பவற்றில் டிப்ளோமா பட்டமும் பெற்றுள்ள சட்டத்தரணியாவார்.

கவிதைக்காகக் கிழக்கு மாகாண சபை விருதைப் (2006) பெற்றுள்ளார்.

- 'பூமிக்கடியில் வானம்' (2005)
- 'பறவை போல சிறகடிக்கும் கடல்' (2006)
- 'எல்லாப் பூக்களும் உதிர்ந்துவிடும்' (2006)
- 'மழையை மொழிதல்' (2009)
- 'துளி அல்லது துகள்' (2020)

ஆகிய கவிதை தொகுப்புகள் வெளிவந்துள்ளன.

339, மக்கமாடி வீதி,
மருதமுனை, 32314
இலங்கை
0094779351334, 0094716356564
மின்னஞ்சல்:- alaririfas@gmail.com
முகநூல் :- Alari Rifas

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கடல்தாண்டி வலியினைச் சுமந்தாலும் வலசைப் பறவைகளின் இறகுகள் கற்றுத்தரும் நம்பிக்கையைப் போலத்தான் கவிஞர் அலறி அவர்களின் இந்தக் கவிதைகள். ஒரு கடல் நாம் பார்க்கும் போதெல்லாம் தனிமையின் ஆழத்தை வருவோர் போவோரிடமெல்லாம் பகிர்ந்து கொண்டு தன் சோகங்களையும் மகிழ்ச்சியையும் அலை என்ற ஒரே மொழியில் நம்மிடம் பேசிக் கொண்டிருப்பதைக் கேட்டிருக்கிறீர்களா.. ஒரு நிலம் காயந்து, வெடித்து, தன்மேல் வளர்ந்த பச்சிளம் செடிகளும், பூச்சிகளுமான தன் சொந்தங்கள் எல்லாம் வாழ வழியின்றிக் கருகிப் போனபோது கொள்ளும் துயரத்தின் வெம்மையை உணர்ந்திருக்கிறீர்களா.. ஒரு இனம் தன் கடைசிச் சொட்டு ரத்தத்தையும் அதிகாரத்தின் அகோரப் பசிக்கு ஈந்துவிட்டு மிஞ்சிய உயிர்களையாவது காப்பாற்றி விட மாட்டோமோ என்று ஏங்கிக் கிடப்பதை பார்த்துதான் இருக்கிறோமோ. இப்படியான வலிகளை நிமிடத்திற்கு ஆயிரம் முறை கடந்து வந்திருப்பவைதான் இந்தக் கவிதைகள். இடம்பெயர்தலின் பொருட்டு இழந்த நிம்மதிகளை, உரிமைகளை மீட்டெடுக்க முடியாமல் சொற்களால் கண்ணீர் வடிக்கும் நம்மைப் போன்றவர்களுக்கு எழுத்தும், எழுதுகோலுமே சிறிய ஆசுவாசம். அதிலும் அந்த எழுத்துகள் தூரதேசத் திலிருந்து முகம் அறியாத நம் சொந்தத்தின் விரல்களிலிருந்து உதிர்ந்தவை என்றால் அதன் வீரியத்தை அளவிட்டு எழுதிவிட முடியாது. அப்படித்தான் இன்று எழுத முடியாத அன்பின் இணைப்பை எழுத நினைக்கிறேன். விடுபட முடியாத உறவின் முன் ஏதிலியாய் கையேந்தி கவிதைகளை வாங்கிச் சுவைக்கிறேன். இந்தச் சுவையும் அன்பும் இன்று வந்ததல்ல என் தமிழ் தோன்றிய அன்று வந்தது. அதை ஒவ்வொரு மிடறாகப் பருக வாய்ப்பளித்த கவிஞர் அலறி அவர்களுக்கு என் நன்றியும், அன்பு வாழ்த்தும் உரித்தாகட்டும்.. தொடர்வோம் யுகங்கள் கடந்து உய்யும் தமிழாக.

- அம்பிகா குமரன்
வேரல் புக்ஸ்

அட்டை வடிவமைப்பு : லார்க் பாஸ்கரன்

வேரல்
புக்ஸ்

விலை: ₹ 70

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org